



ஓலை 89 | ஓசை 212 | செப்டம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com




## ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்!

### பா வகை: நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா

வானவூரைக் கார்மேக மக்களுமே பகைகொண்டால்
ஆனவரை மழைநீரை அள்ளியீந்து வாழலாமோ?
ஞானமுடன் ஊருடனே நன்மைவேண்டி ஒத்துழைத்தால்
வானவூரில் மழைமேகம் வளமாக வாழுமன்றோ!

செங்கதிரைப் பகல்பொழுது சேர்ந்திடாமல் பகைகொண்டால்
இங்குள்ள மண்ணுயிர்கள் இன்பமுடன் வாழலேது?
எங்கெங்கு யார்யாரும் இணைந்துயெவ்வூ ரென்றாலும்
அங்கங்கே ஊரோடு அணைத்தொன்றி வாழவேண்டும்!

மலையூரைச் செடிகொடிகள் மரமெல்லாம் பகைத்தாலோ
நிலையாக வாழ்வதற்கு நீடுபுகழ் பெறுவதற்கு
கலைமிளிர பெரிதுவக்கும் காட்சியாக இருப்பதற்கே
அலையாடும் நெஞ்சினிலே அமையின்றி போகுமன்றோ!




ஆழ்கடலாம் நீரூரை அதில்வாழும் நீரினமும்
பாழ்மனத்தால் பண்பின்றி பகைகொண்டால் வாழலாமோ?
ஊழ்வினையாய் தாம்செய்தே உதறியேதான் பகைத்தாலோ
தாழ்ந்துமானம் போயேதான் தடுமாறும் நிலையாகும்!

வாயூரில் நாக்குந்தான் வகையாகப் பகைகொண்டால்
வாயூரார் பற்களெல்லாம் வகையாகக் கடித்தேதான்
வாயூரில் துடிக்கவைத்துக் குருதியினைச் சிந்தவைத்து
தேயூராய் மாற்றிடுமே தெரிந்தேதான் வாழவேண்டும்!

செல்வமுடன், வளமாகச் செழிந்திருந்தும், திமிருடனே
பொல்லாராய் ஊராரைப் பொறுமையின்றி பகைத்தாலோ
அல்லலுற்று உதவியின்றி அணைத்துநலம் ஏதுமின்றி
நல்வினைகள் மறுத்தேதான் நாம்துயரில் வீழவேண்டா!

* நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா - இலக்கணக் குறிப்பு

அடி தோறும் நான்கு சீர்களைக் கொண்டதாகும். நான்கு முதல் எட்டு அடி வரை ஒரு பாட்டாக எழுதலாம் . அடியை நேரசையில் தொடங்கினாலும் 2,3,4, - ஆம் சீர்களை கலித்தலையான நிரையசையாக இருத்தல் வேண்டும். பெரும்பான்மையான சீர்கள் காய்ச்சீர்களாக இருக்க வேண்டும்.

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**

**பாவகை: அறுசீர் விருத்தப்பா!**
**விளம் +காய் + காய்**

நேர்மறை எண்ணத்தில் என்றென்றும்
நேர்வழி சென்றிடவே எண்ணிடுங்கள்.

சீர்தனை எல்லோர்க்கும் நல்கிடவே
சீலமாய் நன்முறையில் சென்றிடுங்கள்.

ஏர்முனை தன்னாலே சீர்பெற்றே
எங்குமே பெற்றிடுவீர் ஏற்றத்தை

பாரிலே வாழ்ந்திடுவோர் ஊக்கமோடு
பண்புடன் நித்தமுமே வாழணுமே.



கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர் அணை

# தமிழ் கூறும் பக்தி நெறி

## பா வகை: பா வகை: நாலிரு சீரிரட்டை வியநிலைச் சிந்து

அமிழ்தாம் மொழியில் ஆண்டவன் நெறியை
தமிழும் பாடியதே - எங்கும்
தமிழும் பாடியதே
அமைதி பெறவே ஆழ்ந்த மனத்தில்
சமயம் போற்றியதே - இசையும்
சமயம் போற்றியதே

திருமுறை நூல்களும் திவ்ய பிரபந்தமும்
அருளினர் தொண்டர்களே - வணங்கி
பெருக்கினர் பற்றினையே
அரும்பிடும் உணர்வில் ஆண்டவன் வளர்ந்தான்
கருத்துடன் பாடல்களே - உள்ளம்
உருகிட வைத்ததுவே



இறையதன் மீதில் இணக்கம் தைத்த
மறையாம் பாடல்களே - திரு
முறைகள் பாடிடுமே
மறவா திருக்க மனமும் உருக
அறத்தில் சேர்த்தனரே - பாசுரம்
நிறையாய் கோர்த்தனரே

பதிகங்கள் வழியே பணிந்திட அவனிழல்
கதியாய் ஆனதுவே - தமிழும்
நதியாய் கலந்ததுவே
மதியினுள் சுடரும் மங்கா திருந்திட
உதித்ததே இறைபற்றே - இருளும்
உதிர்ந்தது பண்கேட்டே

நாயன்மார் ஆழ்வாரும் நயந்துருகி நமக்களித்த
தேயாத தூயநெறி - வாழ்வில்
பாயாதோ பக்தி நெறி
காயாத உள்ளத்தில் கடவுளரை வடித்தெடுக்கும்
சாயாத உண்மைநெறி - உறுதியில்
மாயாதே இன்பநெறி

இயல்பாக நம்பிக்கை இறைமீதில் தான்போற்றி
இயற்கையுமே காட்டியதே - புவியில்
வியப்பாக பூட்டியதே
இயக்கிடும் ஆற்றலாய் இயம்பிடும் மொழியாய்
மயக்கங்கள் கலைத்ததுவே - தமிழும்
தயக்கங்கள் உடைத்ததுவே

இசையும் தமிழும் இணைந்தே பக்தியை
திசையெங்கும் வளர்த்ததுவே - மனத்துள்
திசைகளைப் பணித்ததுவே
அசையும் பொருளும் அசையா திருக்கும்
விசையாய் இறையீர்ப்பில் - தமிழும்
பசையாய் பரப்பியதே

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# சற்றும் அறமும் தவறேல்

பா வகை: அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்
(அரையடி மா+ மா+ காய்)

இல்லா நிலையும்
போக்கிடுவோம்
இன்றே அறத்தை
செய்திடுவோம்

எல்லா நிலையில்
அறத்தையுமே
எடுத்துக் கொண்டே
சென்றிடுவோம்



நல்ல அறமும்
நன்மையுமே
நாளும் செழித்தே
வளர்த்திடுமே

கல்லா தவரும்
அறத்தாலே
காணா புகழும்
அடைந்திடுவார்

கவிஞர் விஜயலட்சுமி காளிதாசன், கோவை மாவட்டம்

குருவிகள் சத்தம்
ஓயாமல் ஒலிக்கிறது
அழைப்பு மணி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# சென்ரியு

சாலையில் வாழையிலை ஆடையோடு
காணொளி எடுக்கும் யூடியூபர்
விரட்டி மேயும் மாடுகள்

தோல்விமுகத்தில் ஊழலாட்சி
குடும்பத் தொலைக்காட்சி சேனலில்
சனிப்பெயர்ச்சிப் பலன்கள்




கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# மணிமேகலை (இருபத்தி எட்டு)

27, சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை . ( பாகம் : இரண்டு ).

வேதவாதியை சந்தித மணிமேகலை அவர் கருத்தைக் கேட்டாள்
பேதலிக்காமல் கூறினார் கற்பங் கை, சந்தம் கால்கள் , எண் கண்
கேட்கும் செவியே திருத்தமாகும், சீக்கை மூக்கு, வியாகர்ணம் முகம் .
வேத புருடனுக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை என்றான் .

அடுத்து ஆசீவகவாதி யிடம் "உம் இறைவன் பற்றி கூறுங்கள்!"
கெடுதல் இல்லா இறைவன் மற்கலி ,எல்லையில்லா அறிவுடையவன்
உடுப்பாக பூமியில் நிறைந்திருப்பது திண்மை பொருந்திய உயிர்
படுதலாக ஒப்பற்ற நிலம், நீர், தீ, காற்று ஆகிய நால்வகை அணு
(படுதல் : தோன்றுதல் )

நில அணு திட்பமானது, நீர் அணு கீழே விழுவது, தீ அணு மேலே எழுவது
நிலத்தில் வீசும் காற்று அணு எல்லா இடத்திலும் நிரம்பி இருப்பது
நிலத்தில் தோன்றும் உயிர் இந்த அணுக்களை சார்ந்தே வாழ்கின்றது
பலமான உயிரணு பிறப்பு இறப்பு இன்பதுன்பங்களை அடைகிறது




முன்னே செய்த ஊழ்வினைப் பயனே பின்னர் வந்து விளையும்
தன்னிகரற்ற ''மற்கலி கோசர்'' கூறிய ஆசீவக தத்துவமாகும் ''
இன்னது கேட்டு அடுத்து அங்கிருந்த திகண்ட வாதியிடம் கேட்டாள்
''உன்னால் புகழப்படும் தலைவன் யார் அவர் கூறுவது என்ன? '

அருகபரமேட்டியே எம் இறைவன்,கூறும் நூற்பொருள் பத்து
திருவான அவை தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயம் , காலம்
இருக்கும் ஆகாயம், குற்றமில்லாத சீவன், பரமாணுக்கள், நல்வினை
தரும் தீவினை,அதன் பலன், அதன் முடிவு வீடு பேறு என்பன ஆகும் .

சாங்கிய மதம் இதுவே எனக் கூறும் அந்த மத வாதியின் கருத்து
தூங்கினாலும் மனித மனம் தூங்குவது இல்லை உறுதியானது
தாங்கும் மனமே உள்ளத்தில் உணர்வு வடிவாக விளங்குகிறது
ஏங்கி நிற்கும் மனம் அறிவில் இருந்து விலகி தானே செயல்படும்

அதன்பின் வைசேடிக வாதியிடம் .''உங்கள் வாதம் என்ன? வினவினாள்
அதுவே பொருள் தேடும் மனிதனுக்கு உயர்ந்த வழியைக் காட்டுகிறது
எதுவானாலும் மனம் அறிவின் பாதையில் செல்ல கிடைக்கும் உயர்வு
இதனால் குணமும் குணியும் ஒன்றிய ஒற்றுமையைக் கூறுகிறார் .

பூதவாதியிடம், நீ உன் வாதத்தைக் கூறுவாயாக '' என்றாள்
அத்திப்பூ, கருப்புக்கட்டி மற்றும் பல சேர்ந்தால் கிடைப்பது கள்
புத்தியில் ஐம்பூதங்கள் சேர்ந்தால் கிடைப்பது இன்பதுன்பம்
சத்தியமானது பிறப்பு இறப்பில் மறு பிறவி என்று ஒன்று இல்லை

எல்லாச் சமயங்களின் கருத்துக்கள் கேட்டு அறிந்தாள்
இல்லாமல் இல்லை இறைவன் ஒருவன் உண்டு என்கின்றன
செல்லாக் காசாக வாழும் மனித நிலை கண்டு வருந்தினாள்
நல்லனவை கேட்டு உலக சமயங்களை புரிந்து கொண்டாள்

**பாகம் முற்றும்**

கவிஞர் ந.திருக்காமு

# விளங்கவில்லை

உறக்கம்
விழியைத் தழுவாததால்
வெகுநேரமாய்
விழித்துக் கொண்டிருக்கிறேன்.
நள்ளிரவுக்கு மேலிருக்கும்
என்னைப் போல் உறங்காமல்
தவித்துக் கொண்டிருக்கும் நிலவை
மேகக் கந்தலெடுத்து மூடிவிட்டு
அறையின் விளக்கை அணைத்து விட்டு
நானும் உறங்கி விட்டேன்.
உறக்கம் கலைந்து பார்க்கிறேன்
நிலவின் மேகக்கந்தல் விலகியிருக்கிறது.
என்னைப் போல் யாரோவொரு
உறக்கமற்ற நபர்தான்
நிலவின் மேலிருந்த மேகக் கந்தலை
எடுத்திருக்க வேண்டும்.
எல்லாம் சரி
குளிர்நிலா எப்போது
அக்னிப் பிழம்பு சூரியனானதென்று
விளங்கவில்லை எனக்கு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தவம்

வாழ்க்கையே வழங்கப்பட்ட
வளமான வரம்.

காணுகின்ற இடமெல்லாம்
அழகே தவம்.

கடலின் அலையிலும்
வானவில்லிலும் வெண்ணிலவிலிலும்.

பார்க்குமிடமெல்லாம்
பாதைகளெங்கும்
அமைதியின் ஆட்சியிலே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# காட்சிப்பொருளாக நான்

என்னைப் பார்வையிட விரும்பாமல்
முதுகுகாட்டியபடி திரும்பிக் கொண்டன
விலங்குகள்.
இதழ்களில் உறிஞ்சிய தேனை
அள்ளித் தெளித்துவிட்டு
மேலே பறந்தன பட்டாம்பூச்சிகள்.
எனக்கான பேட்டியைத் தவிர்த்து விட்டு
நீருக்குள் மூழ்கி நீந்துகின்றன
நீர்யானைகள்.

பரந்த வெளியானாலும்
பெட்டையை கொஞ்சியபடி
குடும்பம் நடத்திக் கொண்டிருந்தது
பிளமிங்கோ பறவை.
காட்டைத் துறந்துவிட்ட களைப்பில்
கொம்புகளுக்குள் யுத்தமிட்டுக் கொண்டிருந்தன
புள்ளி மான்கள்.
கண்ணாடிக் கூண்டை பிராண்டியும் கீரியும்
முட்களால் கிழிக்க முடியாமல் படுத்துக்கொண்டன
முள்ளம்பன்றிகள்.
தளர் நடையில் உருமியபடி தசைகள் தொங்கியும்
வற்றிய வயிறுடனும் நடந்தே களைத்துக் கிடந்தது
தேசிய விலங்கு.



கண்ணாடி வீட்டுக்குள்
கும்மிருட்டு வெளிச்சத்தில்
அலைபேசி ஒளியைக் கண்டு
அசைந்தபடி எழுகின்றன பாம்புகள்.
மரத்தையும் கட்டையையும்
ஊஞ்சலெனக் கொஞ்சி
இலைகளைக் கடித்தபடி
ஏறியும் இறங்கியும்
நகரும் கரும்பாறையென
கொஞ்சியபடிக் கிடந்தன கரடிகள்.
வனமற்ற வனத்தில்
ஒளிந்து கொண்ட உயிருக்குள்
வாழும் விலங்குகளுக்கு
முகம் காட்ட முடியாமல் திரும்பி வந்தேன்
வனம் தொலைத்தவனாய்
சரணாலயம் விட்டு.

கவிசூர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# அவைக்கஞ்சாமை

அதிகாரம் : 73

சொற்தொகையறிந்த தூயறிவுடையோர்.
அவைத்தன்மையறிவுடன் வல்லோரவையில்.
அச்சத்தால் வாய்சோர்ந்து.
குற்றம்பட பேசார்.

கற்றார்முன் தன்கல்வியை
புரியவைக்க வல்லோர்.
கற்றவரெவரிலும் பெருங்கல்வியாளர்
எனமதிப்புடன் போற்றப்படுவர்.

பகையோரின் போர்க்களம்பூந்து
அஞ்சாது சாகத்துணிவோரிலும்.
அவைக்களத்தில் அஞ்சாது
பேசத்துணிவுடையோர் சிலரே.

கற்றார்க்கு தாம்கற்றதை
உற்றபடியுரைத்து அவரிடமே.
முத்தானமேலும் பலகல்வியை
சொத்தாகப் பெறல்வேண்டும்.



அவைக்கஞ்சாமை

அவையெழும் கேள்விக்கு
அஞ்சாமல் விடைதரத்தக்க.
அரும்பெரும் நூல்நுணுக்கம்
அளவறிந்து கற்றல்வேண்டும்.

அச்சமில்லா வீரரல்லார்க்கு
ஏந்தியவாளின் பயனிலார்போல்.
அறிவுடையோரின் அவைக்கஞ்சுவோர்க்கும்
பனுவலோடு தொடர்பொன்றுமில.

அவைக்கு அச்சமுடையோர்
கற்றநூல் அவர்கட்க்கு.
பகைக்களத்தில் அஞ்சும்பேடியின்
கையேந்திய கூர்வாள்போன்றதே.

நல்லறிஞர் அவைகளில்
நற்பொருளை கேட்பார்மனம்.
ஏற்கும்வகை உரைக்கவியலாதார்
நற்பனுவல்கற்றும் பலனிலாதவரே.

நன்நூல்பல கற்றிடினும்
நல்லறிஞரவையில் அஞ்சிநிற்போர்.
கல்லாதவரிலும் கீழான
கடைப்பட்டோ ரெனப்படுவர்.

அவைக்கஞ்சி அவையோர்க்கு
அழகாய் புரியும்படி.
தம்கல்வி உரைக்கவியலாதோர்
உயிரிருந்தும் இறந்தோரெனப்படுவர்.

கவிசூர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

பட்டா போட்ட
காலி மனை
அனுமதி இல்லாமல்
குடியேறியது

"பக்கத்து வீடுகளின் குப்பைகள்"



கவிஞர் கு. விக்னேஷ், வேலூர்

# காதலால் களிப்பானேன்! கனியமுதே!



சின்ன இதயத்தில்
இளையவள் நீதானே
சிறகடித்துப் பறக்கிறேன்
சிந்தையைக் கவர்ந்தவளே
வெண்ணிலவின் வெளிச்சத்தில்
பொன்னாய் மின்னுகிறாயே

விழிகளின் சங்கமத்தில்
ஆசைகள் துளிர்க்குதே
கரங்கள் இணைந்திட
காதலும் பூத்ததே
கன்னங்கள் சிவந்திட
காவியம் ஆகுதோ

மெல்லிடையாளே மேனியெங்கும்
மின்னல்களின் கீற்றே
எழிலரசியே என்னுள்
மின்சாரம் பாய்ந்ததே
இதமான அணைப்பினிலே
இன்பமது இனிமையாகுதே

நெஞ்சமும் துள்ளலாகுது
மஞ்சமது அழைக்குதே
காதலால் களிப்பானேன்
கனியமுதே கண்ணே
முத்தமிடவே அதரங்கள்
ஈர்க்குது என்னையே

உள்ளத்தில் உலவுபவளே
உறவாகியே வந்துவிடு
இளந்தளிரே இளவரசியே
பூந்தளிரான புன்னகையே
யுவராணியே யுகங்களாய்
உன்னுடன் சேர்ந்திருப்பேன்

நெஞ்சத்தில் நீங்காதிரு
இல்லறத்தில் இணைந்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

நீரறுத்து இன்னல்இழைத்த கூளியர்
நிலைதிரிந்த மாக்கள் நிரை உதிர
வறண்ட கழனி வறுமை வாழ்க்கை
வரிச் சுமை வழங்கும் வேந்து.

தீங்கிழைக்கும் எருமையூர் செறுநன்
தமையனில்லா செந்தமிழ்நிலம்.



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ் நாடு

# தரவிறக்கம்



எவ்வாறு தான் தரவிறக்கம்
செய்வதோ தெரியவில்லை
கொடுக்கும் இறக்கம்
வெறுப்பில் வீழ்கிறதே.
நெருப்பில் விழும் விறகு
என்றாகியும் விடுகிறதே.

திறக்கவே முடியாத
நிலையிலா
சில மனங்களை எவ்வாறு
இலகாக்கிடவே தெரிவதில்லை

இவ்வாரானவர்களிடமிருந்து
எவ்வாறு தான் தரவிறக்கம் செய்வதோ
இறக்கத்தை.
சிறகுடைந்த நிலைதான் அல்லவா
கொடுக்கிற அன்புகள் அம்பாய்
குத்திடுமே.

வம்பெனத் தாக்கியும் விடுமே
கொடுக்க கொடுக்க கசந்ததில்லை
தரவிறக்கத்தின் போதே
வலிக்கவே செய்கிறதே
ஜோதியற்ற நிலை போல
மனம் வெறுமையாழத்தை
கண்டு விட்டு
மௌனம் கொள்கிறது.

போலியுலகமே
வேலி போட நினைத்தாயோ யென
மனம் கேட்டுக்குடையுதே
தரவிறக்கமாகுமோ
தடையாகி நிற்கும்
இணைய காணொளிபோலவா
அன்பின் தரவிறக்கம்
இன இறக்கமில்லையோ
பிற மனமோ
திற மனமே
வருத்தி நிற்பதேனோ

கவிசூர் சஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# ஆறுகளை ஆராதரிப்போம்

கவிஞர்களும் புத்தகமும் ஆற்றை வருணிக்க
ஆறுகளின் ஓட்டம் சலசலவென கேட்க
இயற்கையின் படைப்பில் கொள்ளை அழகு
நன்னீரோடு சேர்ந்த அழகிய பூந்தோட்டம்
ஆறுகள் மனிதனுக்கு குடிநீர் தேவையோடு
வாழ்வியல் தேவையும் நிறைவு செய்தது
மின்சாரம் கூட ஆற்றோரத்தில் உற்பத்தியாகிறது
மழைக்காலம் மற்றும் வசந்த காலத்தில்
நீரோட்டம் ஆர்ப்பரித்து கொண்டே இருக்கும்
கோடையில் வறண்ட நிலையில் உருவாகும்
நீளமான ஆறு உலகில் நைல்
இந்தியாவில் நீளமானது கங்கை ஆகுமே
ஆரம்ப காலம் நகரங்கள் எல்லாம்
ஆற்றங்கரை நாகரீகமாக விளங்கி வந்தன
பெரும்பாலான ஆறுகள் நிலத்தை வளப்படுத்தி
கடலிலே கலந்து விடுவதும் உண்டு
மனிதன் மட்டுமல்ல எண்ணற்ற உயிரினங்கள்
ஆற்றை நம்பி வாழ்கின்றன
ஆறுகளை புனிதமாக கருதுவோம் மாசு
படாமல் காப்பது நமது கடமையே



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# சற்றே மற!

இளங்காலை நடை;
தனியே ஒரு நேரம்!
சிட்டுக்குருவி "சட்"
என
சேதி ஒன்று சொல்ல;
"பட்" என்று திரும்ப,
"கம்" என்று கம்பு காட்டின்
பால் பிடிக்கும் வாசம்.
மஞ்சள் நாற்றின் நடுவே,
தவளைகளின் கும்மாளம்;
"கரட்" " கர்ட்" என,
புது நெல் வாசடன்
குருத்திஞ்சி மணமும்
மனதை அள்ளும் வினோதம்.
கதிரவன் எழ
தாமரை மலர;
தினகரன் கதிர்
பார்த்து,சூரியகாந்தி
தலை அசைக்க,
செவ்வந்தி பூக்காட்டில்
கிளி இரண்டு
"சிவ்" என பறக்க;
செழுமையாய் பூத்த
செண்பக மரம்.



சந்தனம் பூத்ததோ
என்று மனம் மயக்கும்.
இதை ரசிக்க,
இதில் மயங்க;
செல்பேசியை மட்டுமல்ல;
அலுவலக நினைப்பு,
அன்றாட கட்டாயங்கள்
இவற்றையும் கூட,
சற்றே தள்ளி வை!
புத்துணர்வுடன்
புத்துயிர் பெற்று,
விசையுறு அம்பு நிரக்க;
நீ திரும்புவாய்
இன்றைய" இன்றை"
சந்திக்க,புது வேகத்தில்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# விதியா? மதியா?

யானையொன்றைக் கொண்டுவந்து பானையொன்றை அதனிடம்கொடுத்து
யாவர்க்கும் வேண்டும் தண்ணீரை முகர்க்கச்சொன்னால்
யானையும் முகர்க்குமோ அந்தப்பானைக் கொள்ளுமளவினும்,
யாவரும்வியக்கும் வண்ணம் ஒரேயொருசொட்டு மிகுதியாய்?

பகுத்தறிவு, பகுத்தறிவென்று பயங்கரமாய்க் கூச்சலிடும்
பைந்தமிழ் நாட்டு ஏட்டறிவு அறிஞர்களே,
பத்துப்பதினைந்து அறிஞர்கள் நீங்கள் ஒன்றுகூடி
பானையொன்றில் அதன்கொள்ளளவிலும் கூடுதலாயொரு சொட்டுத்தண்ணீர்
பிடித்துவிட்டாலடி யேனேற்பேன் முயற்சிதரும்திரு வினையென்பதையே!

தெய்வம்வந்து உதவமறுத்தாலும் உடலினுழைப்பு உழைத்தவளவிற்கு
திடமான ஊதியம்தரும் மென்பதையேற்றிட லாமென்றாலும்
ஆரோக்கியமான உடலோடு அறிவும் வேண்டுமேயவை
அனைத்து மனிதர்களுக்கும் பொதுவாய்யென்றும் கிடைத்தனவோ?

பிறக்கும்போதே எத்தனையெத்தனை வேறுபாடுகளுடன் பிறக்கின்றோம்;
பிறந்தபின்பும் எத்தனையெத்தனை வேறுபாடுகளுடன் வாழ்கின்றோம்?
ஆதலாலே அடியேனிங்கு சத்தமாக உரைத்திடுவேன்,
"பிறப்பொக்குமெல்லா வுயிர்க்கும்" என்பதுவுயர்வு நவிற்சியென்றே!

விதியை வென்றிடும்மதி என்போரே யானும்
விதியை வென்றிடும்மதி என்றேயுரைப்பே னாயினும்
விதியை மதியது வென்றிடவேண்டு மென்றால்
மகேசனின் திருவடியைப் பிடிக்கும்மதியே வேண்டும்;
மார்க்கண்டேயர் மகேசனைப்பிடித்ததைப் போலநாமும் பிடித்திடவேண்டும்!
அப்படிப்பிடித்திடல் அம்மையப்பன் அருளினால் நடந்திடலாகும்!

தமிழவ்வையவள் மூதுரையில் உரைத்தவண்ணம் நம்வாழ்வில்
தொல்லைதரும் உறவுகளும் திருப்பம்தரும் நட்புகளும்
இருப்பதுகண்டு நிறைகளுக்காய் குதிக்காது குறைகளுக்காய்
இதயம்பிழக்க அழாதுநமக்கு வாய்த்தவிதியிவை யெனயேற்று
இம்மண்ணில் வாழ்ந்தால் மனநிறைவோடு வாழலாமே!
விதியை நம்புவதால் தவறொன்றுமில்லை; வெற்றியோதோல்வியோ
வீணாயந்த நினைவில்மூழ்கி அழியாது வாழ்ந்திடுவோமே!




ஔவையாரின் மூதுரை பாடல் 19:

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# ஓ பணமே! – பாகம்: 2

திறமைகளின் வெளிப்பாடு.
உழைப்பின் உன்னதம்.
பரிசு பணமாக இருக்கட்டும்
இறைவா!

உழைப்புக்கும் திறமைக்கும்
தக்க பணம் கிடைக்க மானிட மனதில்
பேசும் இறைவா!

இலவசமாக கிடைத்தால் போதும் என்று நினைக்கும்
கற்பாறை போன்று இருக்கும் மானிட !
மனதை பணம் ஒன்றே அனைத்துக்கும் நிரந்தரம் என்று
நினைப்பை மாற்றி
பணத்திற்கு ஆதாரம் அன்பு என்று
மாற்ற நீ வருவாயா இறைவா!



வா இறைவா!
எனக்காக தருவாய் இறைவா!
பணத்தை
அன்றாட தேவைக்கு.
பிள்ளையின் படிப்பிற்கு.
உறவுக்கு உதவ

அன்பின் வெளிப்பாடாய்
வெளிக்காட்ட பணம் உதவுகிறது இறைவா!

பூவுலகில் பூஞ்சோலையாக வாழ்க்கையில்
வண்ணமயமாக மாற பணம் மட்டுமே அல்ல என்பதையும்
மானிடர்க்கு உணர்த்தும் இறைவா!

பணத்தோடு அன்பும் கலந்தால்தான்
சந்தோஷமும் சமாதானமும் என்றென்றும் இருக்கும்!

அன்போடு பணம் எனும் பொக்கிஷத்தை கலந்தால்தான்
அன்போடு பணத்தை ஒளித்து வைத்திருக்கும்
மர்மத்தை வெளியிடு இறைவா!

நன்றி இறைவா!

கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், சென்னை[செங்கல்பட்டு மாவட்டம்]

# நினைவுகள் பத்திரமாய்

என்னை வேண்டாமென்று
சென்றுவிட்டாள்.
நினைவுகளை
என்ன செய்திருப்பாள் ?
மண்ணோடு மக்கச் செய்திருப்பாளோ
தீயிட்டுக் கொளுத்தி இருப்பாளோ
எழுதித் தீர்த்து இருப்பாளோ
அழுது கரைத்திருப்பாளோ
என்றெல்லாம் யோசிக்கையில்,
என் உள்மனம் சொல்லியது
இதயத்தின் ஒரு அறையில்
பத்திரமாக
பூட்டிவைத்திருப்பாள் என்று.



கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# தொப்புள் கொடியுறவு

ஈரைந்து மாதங்கள்
வயிற்றில் சுமந்து
உயிராய் எனையீந்து
உலகைக் காட்டியவளே
அன்று முதல் இன்று வரை
நீயே எனக்கு எல்லாமுமாய்



பல உறவுகள் பாரினிலே
இருக்கின்ற போதிலும்
பாசமழை பொழிந்து பக்குவம் காக்கின்ற
தாயே உன் கரிசனைக்கு
உனக்கு நிகர் நீயேதான்

கருவறையில் சிதைவுறாமல்
சிரத்தையுடன் தாங்கி
இதயவறையில் நித்தமும் பூட்டிப் பாதுகாத்து
அழும்போதெல்லாம் அன்பாய் அமுதூட்டியவளே

நோயுறும் வேளைகளில்
நொடியும் தாமதிக்காது
கண்ணுறக்கம் மறந்து
கவலையில் தோய்ந்து
தாயாகத் தாதியாகப் பணிவிடைகள் செய்தவளே

இன்னல் துன்பம் அனைத்தும் களைந்து
இகத்தில் நான் ஈடேற்றம் கண்டிட
வலதும் இடதுமாக இருந்து
எனைப் புடம்போட்டாயே

அறிவுடன் பாசத்தைத் தேனாகப் பருக்கி
உறவுகளை நேசிக்கும்
வித்தை கற்பித்து
சவால்களை எதிர்கொள்ளும் திறனையும் தந்தவளே

தொப்புள் கொடியோடு
தொடர்ந்திட்ட உறவை
தப்பாமல் வாழ்வில் வளமாக்கியே கண்ட
தாயே நீ வாழ்ந்திடுக
பல்லாண்டுகள் பாரினிலே

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# தன்னம்பிக்கை

தோல்விகள் உனக்கு சொந்தமில்லை
வந்து செல்லும் விருந்தாளிதான்!
தோற்றவன் வெல்லாமல் இருந்ததில்லை

இலட்சியங்கள் தோற்கலாம்
உரவுகள் உன்னை தூற்றலாம்!
மூடிய கதவு கண்முன்னே!
திறந்த கதவுகள் உன் பின்னே!



நேர்மறையான எண்ணங்களே
உனை செதுக்கி முடிக்கிறது!
முடியும் என்றும் முயற்சிசெய்
தோல்வி கூட உனை தொடத்தயங்கும்!

இடர்கள் உன்னைத் தொடரலாம்
இயல்பு வாழ்க்கை மாறலாம்
செத்துமடிந்த இலைகள் கூட
நீர்த்துளியில் உருவெடுக்கும்

உதிர்ந்து விழும் பழங்கள் கூட
விழும் இடத்தில் எழுந்து நிற்கும்
உயிர் உள்ள மனிதன் நீ உனக்கு ஏன் முடியாது?

முடியும் என்றும் நினைத்திடு
கடின உழைப்பில் வென்றிடு

கவிசூர் ஆர். ஆர். எப். ஷஸ்(Z)னா, ஹெம்மாதகம

# லிமரைக்கூ கவிதைகள்

ஏணியில் ஏறிய எறும்பு
கீழ்நோக்கி விரைவாக இறங்கும்
கீழே, காகம்போட்ட கரும்பு
***

மரம் வரத கரம்
மறக்காமல் என்றும் மண்ணில் நட்டால்
வழங்கும் பெரிய வரம்
***

பாதை மாற்றும் பேதை
போத்தல் மறந்து புத்தியைத் தீட்டினால்
பாரில் அவனே மேதை
***

கற்பனையில் கண்ட சிலை
சிற்பி கையில் சிலையாகுகையில்
சிரிக்குமதில் கவின் நிலை
***

பாறையில் மோதும் நதி
பலரின் பார்வையையும் கவரச் செய்யும்
பாடுகின்ற அதன் சுதி
***

நாட்டின் நாளாந்த விலையேற்றம்
ஏழைகளின் அன்றாட வாழ்வைச் சோதிக்கும்
இடர்ப்பாடு நிறைந்த மலையேற்றம்
***

கொழுந்து பறிக்கும் முகங்கள்
கோபுரமாய் நாட்டை நிமிர்த்தி நிறுத்தும்
காலத்தை வெல்லும் அகங்கள்
***

சந்தேகம் நிறைந்த கோடுகள்
சகலதையும் அழித்து ஒழிக்கும்
சந்தோசம் தின்னும் காடுகள்
***

ஆரம்பப் பள்ளி அகரம்
அடுக்கடுக்காய் உயரும் பிள்ளைக்கு
அதுவே வாழ்வின் சிகரம்



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான் (இலங்கை)

# கனவு

அஞ்சல் அட்டையில் கவிதை
போட்டிக்கான தலைப்பு
கவின்மிகு கனவு

தலைப்பு என்னை கவிதை
வரிகளுக்குள் இழுக்க
எழுதுகோல்

என் கரங்களில்
கவிதை வரிகளைத் தேடி
ஊர்வலமாய்

ஊர்வலத்தில் மிதிப்பட்ட வரிகள்
குப்பைத்தொட்டியை நிறைக்க

மிச்சமான வரிகளோ காகிதத்தில்
எழுத்துக்களாய் உருமாற

கவிதை வரிகள் காகிதத்தில்
சுகப்பிரசவமாய்

கடைசி வரிகளில் எனது
அடையாளம் பதித்தவுடன்

கனவு கலைந்தது
எனது கவிதை தொலைந்தது
அஞ்சல் அட்டை சிரித்தது




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# சாலையோர வாழ்வு

சாலையோர சாக்கடை அருகே
கோணித் தடுப்பில் மறைவு!
சுடும் நெருப்பாய் சூரியன்
தண்மையை தந்திடும் நிலவு
வானமே கூரையாக
வாழ்க்கையை நடத்திட!
பரிதாபமாய் பார்க்கும்
ஏளனப்பார்வையை கடந்து வர!
படிப்பு கைகொடுக்கும்
மதிய உணவு பசியாற்றிடுமென்று
பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப!
சீவி முடித்து சிங்காரித்து
சிரித்து மகிழ!
தாபமோ கோபமோ அனைத்தும்
வெட்டவீதியில் நடத்திட!
பணக்காரன் போதையில்
நாயை அடிப்பது போல்
காரைக் கொண்டு மேலேற்றி
எங்கள் உயிரைப் பறிக்க!
படும்பாடு போதாதென்று
இருப்பவரையும் இழந்து வாடும்
வாழ்க்கையே எங்கள் வாழ்வு!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# கையூட்டு

ஊழியத்திற்கான ஊதியத்திற்கு
தரப்படும் மரியாதையோடு
ஊதியம் பெறுபவர்
முதலாளி மனநிலையோடு
ஊதியம் கொடுப்பவர்
தொழிலாளி மனநிலையோடு
ஆக முற்றிய
இந்த ஒரே ஒரு முரண்பட்டோடு
பெறப்படுகிறது
கொடுக்கப்படுகிறது
மண்டையோடு மூடிய
மனித மூளைக்குள்
உதித்த ஏற்பாடு
கையூட்டு



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# கவிதைகளின் அரசி அவள்

கண்களால் என்னை
கட்டுப்படுத்தும் கலையெவ்வாறறிந்தாய்
கருஞ்சூரியனை உன்
கண்களுக்குள் மறைந்து
வைத்ததாலா
கவிகளின் அரசியென்ற
பெயர் கொண்டதாலா



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# எது அறம்?

இல்லறத்தில் இருந்து வெளியேறினான் சித்தார்த்தன்
மூப்பு பிணி சாக்காடு பின்னர்
பசிப்பிணி தூக்கமின்மை காமம்
மீளாத் துயரில் அழுத்தியது இளவரசனை

அரண்மனைக்கு திரும்பிடலாமா?
யசோதையின் பாதத்தில் பணிந்திடலாமா?
ஏற்றுக் கொள்வாளா?
ஏளனம் செய்வாளோ?

ஒரு நொடி தாமதித்தான்
வந்த வழியே திரும்பினான்
இல்லறமா? துறவறமா? என்பதல்ல!
இருக்குமிடத்தில் எது நியாயம்?
அது அறம்!

முன்னிலும் பனி சுருக்கென்றது
முன்னிலும் பசி உசுப்பேற்றியது
உணவுப்பசி ஆறினால் உடல் பசி
பசித்திரு! தனித்திரு! விழித்திரு!

அமர்ந்தான் மரத்தினடியே
மெல்ல உடல் வழிக்கு வந்தது
மெல்ல மனம் உறங்கலாயிற்று
விழிப்புநிலை உள்ளே புலனாயிற்று

வாய் திறந்தால் வேதமாயிற்று
வாய் வழியே செய்தி பரவலாயிற்று
சீடர் கூட்டம் சேர ஆரம்பித்தது
தம்மபதம் கருக்கொணடு உருவானது



புத்தனுக்குள் ஒரு கேள்வி
யசோதை நினைவில் இன்னும் அகலவில்லை
முற்றிலும் துறக்காத போது துவராடை சரியா?
மனத்தில் மாசுடன் உபதேசம் சரியா?

இரண்டாம் முறை ஆசிரமத்தில் இருந்து வெளியேறினான்
யாருக்கும் தெரியாமல் விரைந்தான்
யசோதை ராகுலுடன் தனியே வாசம்
வாசல் கதவை தட்ட எத்தனித்தான்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# வலிகள் கடந்து போகட்டும்

மழை விட்டு
வெகு நேரம் ஆன பின்பும்
தென்னை மரத்திலிருந்து
விழும் மழைத்துளிகள் போல் - மனம்
அசை போட்டுக் கொண்டிருக்கிறது.

வார்த்தைகளுக்குதான்
எவ்வளவு சக்தி
நினைக்கும் பொழுதெல்லாம்
கண்ணீர் துளிர்க்கிறது.

காய்ந்த சருகுகள் போல
மிதி படும் போதெல்லாம்
சலசலத்து போகிறது
ஆழ்மனம்.

வெந்தணலில்
வெந்து கொண்டிருக்கும் பொழுது
கார்மேகம் இடைமறித்து
மலைச்சாரல் பொழியும் முன்னே
எதேச்சையாக வீசும் காற்றால்
களைந்து போன
மேகக் கூட்டம் போல்
ஏமாற்றங்களால்
கலைந்து போன
கனவுகள் ஏராளம்.

உழைத்து உழைத்து
தேய்ந்து போன பிறகு
சப்தமிட்டு கொண்டே
சுழலும் மின்விசிறி போல்
புலம்பிக்கொண்டே இருக்கிறேன்.



அமைதியான குளம்
முதல் கல்லடி படும் பொழுதே
தன்னை சுதாரித்திருக்க வேண்டும்!
முற்றும் கலங்கிய பிறகு
புலம்பி கொண்டே இருந்து
என்ன பயன்?

இப்பொழுதெல்லாம்
இதுவும் ஒரு வலி என்று
கடந்து போய்க்கொண்டிருக்கிறேன்
ஏனென்றால்
அதுதான் ஒரே வழி.

கவிஞர் சி முத்தரசன், அரியலூர்

# காரிகையே!



அந்தரத்தில்
ஊஞ்சல் ஆட்டம்
ஆடிடும்
காரிகையே!

சொல்லாயோ
வாய் திறந்து
சுகமான உன்
நிலையை.

□
பசுமை உன்
காலடியில்
பாயும் நதி
அதனிடையில்

பத்திரமாய்
தானாடு,
பல பாடல்
நீ பாடு!

□
இக்கணத்து இன்பமதை
என்னவென்று நீ சொல்லு.

ஆகாச ஊஞ்சலாட்டம்
ஏனுனக்கு
தான் விளக்கு?

ஆரஞ்சு தாவணியில்
ஆடிடும் தேவதையே!

ஊஞ்சல் கயிறை
பிடித்திருக்கும்
தேவர்களும்
தான் வாழ்க!

□
ஊஞ்சல் ஆடி முடித்தவுடன்
இறங்கி வந்து
செவி சொல்லு!

இயற்கை அரசி
நீ இல்லை.
இருவரும்
வேறென்று.

கவிஞர் மு.சரவணன், மயிலாடுதுறை

காலம் கற்றுத் தருகின்ற பாடம் போல
அனுபவத்தில் சிறந்த ஆசானால் கூட
கற்றுக் கொடுக்க முடிவதில்லை.
அனுபவங்களே வாழ்வில் சிறந்த ஆசான்கள்.
ஓடி ஓடிக் களைத்த பின் தானே
உனக்கும் தண்ணீரின் அருமை புரிகிறது



ஏறி ஏறிக் களைத்த பின் தானே
மேடு பள்ளங்களால் கால்கள் வலிக்கின்றன.
முயன்று தோற்றலில் நீ சோர்ந்து விடாதே.
வெற்றியின் படிகளை திரும்பிப்பார்.
காலம் உனக்கு பதில் சொல்லும்.
காத்திருத்தலை முயற்சிகளால் கோர்த்துவிடு.

வாழ்க்கையில் ஆயிரம் தடைகள் காண்பாய்
உன் நடைகளை மட்டும் தளர்த்தி விடாதே.
சாதனைகள் சோதனைகளால் நிறைந்தவை
கடந்து போதல் தான் வெற்றியின் ரகசியம்
தடைகளைத் தாண்டி தனியே நடந்துபோ.
சவால்களை வென்றிட அதுதான் பாதை.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# உங்களைப் போலல்ல நான்

கள்ளிச் செடியை நட்டு முள்ளை
மலரை எதிர் பார்க்கிறேன்.
தொலைப்பேசிக்கு பூட்டைப் போட்டு
வீட்டிற்குப் போட மறுக்கின்றேன்.

காட்டிற்கு தோட்டக்காரன்
வைத்து காவல் காக்கின்றேன்.
தங்காது என்பதால் தான்
தங்கத்தை சேர்க்கின்றேன்.

நாணயம் இழப்பதால் தான்
நாணயம் சேர்கின்றேன்.
கொஞ்சம் விசித்திரமானவன்
உங்களைப் போலல்ல நான்.



கவிஞர் கோ.தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# புனித வாழ்வு

மக்கள் போற்றும் மகத்தான மனிதன் என்றும் புனிதனே
எளிய குணம் இனிய மனம் என்றும்
மாறா மனிதனே எளிமையின் சின்னமே.



ஏற்ற இறக்கம் வாழ்விலே
இயல்பான ஒன்றுதான் குலையாத
மனம் படைத்து சலியாத உழைப்பாளே.

குன்றாக உயர்ந்து நிற்கும்
குணம் மிகுந்த மனிதனின்
வாழும் காலம் புனிதமே!
அழிவில்லா உலகத்திலே
நிறைவான வாழ்வையும்

மனிதனாய் பிறப்பெடுத்து புனிதனாய் உயரும் நிலை
பூமியிலே மனிதனுக்கு புகழான இடமுண்டு.
மனிதரிலே மாணிக்கமாய் திகழ்ந்திட்ட தலைவர்கள்
நேசம் பாசம் அன்போடு.

மக்கள் நலனை உயிராய்
போற்றிய குணத்தாலே
புவியிலே அழியா புகழ் கொண்டு வாழ்கின்றர்.

மனசாட்சியே உயிராய்; மனித நேயமே மூச்சாய்;
அறமே வாழ்வாய்; வாழும் மனிதன்
என்றுமே புகழான புனிதனே!

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# உன் குடைக்குள் நான்

கடல் கரையை
சிநேகிதம் செய்து
காற்று முத்தத்தை
கிள்ளி பார்த்தேன்

நாணத்தில் ஒடி
நடுக்கடலில் உறவாடுது
படபடத்த சேலைமுந்தியை
இருக்கிக் கொள்வதற்குள்

அவசர ஆலோசனையில்
புரண்ட அலைகள்
அணைத்தவிட்டது

பாதச்சுவடுகளின்
பரிதவிப்பு சற்றே பதறலாய்
விரலுணர்த்திய நேசத்தில்
விழிக்குள் வேர்வைத் துளிகள்

வளையொலி பாதை கண்டு
தடுமாறிய பொழுதில்
புழுதியின் தழுவலும் சேர

முகம் பொத்திய பார்வையில்
முரசின் சத்தம் பெரும் தாளத்தில்
பார்வை ஒன்றே போதும்
கொத்தித் திண்ணும் கூர்மையும்
குழைந்த மனமொழியும்



மௌன வடித்த பாஷையோ
தூரத்து படகின் துடுப்பின்
வலியை உணர்ந்து

மனம் பேசும் மொழிகள்
எத்துனை விதமென
ஒதுங்கிட முடியுமா

விரிந்த கண்கள் திறந்த மனதுள்
நுழைந்தும் கலைந்தும்
தோற்றம் மாறும் காட்சிகள்
மௌனமே விழுங்கிக் கொள்
செரிமான களஞ்சியம் நீயன்றோ
நிழலை தாண்டிய நிர்பந்தம்
உன் பந்தம்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

மீட்டாத வீணை
இழையோடும் மௌனம்

இலக்கணமற்ற கவி
புதிர்பேசி பழகும்

செவியுரசும் அனலில்
சிறு சொட்டு கடல் ருசி

வரிகளில்லா வானத்தில்
இசை பாடும் பறவை

விழிமூடி இரசிக்கும்
சிற்றிதழ் புன்னகை!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# சமையலறை சாம்ராஜ்யம்



பல இல்லத்தரசிகளின் ராஜ்யம்
இங்கே மட்டும் தான் அரங்கேற்றம்.
சபைதனில் எடுபடாத வார்த்தைகள்,
கடுகுக்கு போட்டியாய்
சப்தமின்றி வெடிக்கிறது.
தலைக்கேறும் கோபமும்
பாத்திரங்களோடு போர்க்களமாய்.
பகல் இரவு பேதமில்லை,
விடுமுறை நாள் கணக்கு இல்லை.
விரும்பி விடுப்பு எடுக்க முடியாத
பந்தத்தில் சிக்கிக்கொண்டதால் ,
உடல் நலிவுற்ற போதும் ஓய்வெடுக்க மனமில்லை.
பசியாற்றும் தேவதை பசியோடு காத்திருக்க,
பாராட்டு மழையில் மயங்கி நிற்கும் அன்னபூரணி.
பத்திரம் இல்லாத வங்கி சேமிப்பு இங்கேதான்
ரகசியங்கள் பதுக்கும் ரகசிய அறை இங்கேதான்.
பல முக்கிய முடிவுகள் இங்கே எழுதப்பட்டுதான்
சபையினில் அரங்கேற்றம் பெறுகிறது.
அறுசுவை போல் நவரசம் பார்த்த இந்த அறைதான்
பல கண்ணீரை மறைத்தும் பாதுகாக்கிறது.
அரியணை இல்லா அரசாங்கத்தில் நின்றபடியே
அற்புதமாய் ஆட்சி செய்கிறாள் நம் வீட்டு இல்லத்தரசி.

கவிசூர் சூர்யா பாலகிருஷ்ணன்

# நானும்

## நானும் காகமும்
********"***********

காகம் கரைகிறது
நானும் கரைகிறேன்
இயற்கை எழில்
இல்லாததைக் கண்டு
கண்ணீரில்
நானும் கரைகிறேன்



## நானும் குயிலும்
******************

குயில்கள் கூவுகிறது
நானும் கூவுகிறேன்
நிலத்தடி தொட்டியமைத்து
மழைநீர் சேமியுங்கள்
மரங்கள் வளருங்கள் என்று
நானும் கூவுகிறேன்

## நானும் மலரும்
******************

மலர்கள் மலர்கின்றன
நானும் மலர்கிறேன்
தினமும் என் மனம்
புதியதை தேடி மலர
நானும் மலர்கிறேன்

## நானும் சூரியனும்
***********************

சூரியன் உதிக்கின்றது
நானும் உதிக்கின்றேன்
புதிய சிந்தனையோடு
புதிய மனிதனாக
நானும் உதிக்கின்றேன்
மறைவதில்லை
உதயம் மட்டுமே
தமிழோடு இருப்பதால்.

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# தனிமையே போதுமே

சிறு மழலைப்பருவம்.
சேலை அணியும் ஆவலில்
உன் வருகைக்கு காத்திருக்க

இன்று நீ வந்துவிட்டாய்
இருப்பினும் நான் காத்திருக்கிறேன்.
திங்கள் திங்களுக்கு.

நீ வாரா விடில்
பதற்றம் தலைக்கேறி
செய்வதறியா செயலை பல செய்ய.

ஆடி அசைந்து நீ சிந்திட
வலி பெருகுதே.
அந்தக்கணம் ஆனதே முடிவாய்
சேலையும் வேண்டாம்.
தாவணியும் வேண்டாம்.



எனை சிறு பிள்ளையென செய்திடு.
மெய் சிலிர்க்க நான் அதையும்
மறைத்து வாழ பழகுகிறேன்.
மீண்டும் எனை சிறு பிள்ளையென செய்திடு.

இனிக்க பேசும் காதலும் வேண்டா
சலித்து பேசும் உறவும் வேண்டா
வேண்டாம் வேண்டாமென
மகிழ்ச்சியை திணிக்க தனிமை போதுமே.

கவிஞர் ச. கார்த்திகா, பழநி

# மாலவன் வைணவம் 50

## ஆண்டாள் 20

## நாச்சியார்மொழி 06 வாரணமாயிரம் 01-06

தன்மணாளரை பிரிந்திருந்த சீதைக்கு நற்திரிஜடை
தான்கண்ட இன்கனவு நேருரைத்து தேற்றுகின்றாள்!
எம்பெருமான் சேர்க்கைதனை பெற்றிடாத ஆண்டாளோ
கொண்டகனவில் அவன்தன்னைக் கண்டதுவாய்ச் சாற்றுவது
இன்பனுபவம்! அவனோடும் தன்றனுக்கு கல்யாண
வைபவமே அனுபவிப்பாள்! முதலாவது பாசுரத்தே
ஆயிரமாம் வாரணங்கள் சூழ்ந்துவரும்! எதிர்நின்று
எழில்மாதர் பூர்ணகும்ப வரவேற்பு நல்குவரே!
புரமெல்லாம் தோரணங்கள்! முத்துபந்தல் உள்வந்தான்
மணமகனாய் எம்பெருமான் மணந்திடவே கோதைதனை!
இரண்டாவது பாசுரத்தே வதுவையது நாளையென
நாள்குறித்து கமுகுபாளை பரிசுடைய பந்தல்கீழ்
கண்ணனவன் புகுந்தனனே! நரசிம்மன் கோவிந்த
மாதவனென ஆயிரமாம் பெயருடையோன்! மூன்றாவது
பாசுரத்தே நாத்தனாராம் துர்கையவள் கோதைதனை
மணமகளாய் இனிதாக்கி மந்திரக்கோடி உடுத்திட்டு
மணமாலை சூட்டினளே! இந்திரனொடு தேவர்குழாம்
வந்திருந்து வாழ்த்தினரே! கனவெனிலும் நிகழ்வாக
பூரித்தாள்! நான்காவது பாசுரத்தே விவாஹத்தின்
அனுஷ்டான க்ரமமாக காப்புகட்டல் கண்ணனுக்கும்
கோதைக்கும் நிகழ்ந்ததுவே! திசைபலவின் தீர்த்தங்கள்
நல்கிட்டு தெளித்தனரே! மந்திரங்கள் ஓதினரே!
கண்ணனுக்கும் கோதைக்கும் மணமாலை சூட்டினரே!
ஐந்தாவது பாசுரத்தே தீபமொடு கும்பத்துடன்
சதிர்திறம்சேர் இளமாதர் கண்ணனையே பந்தலுக்குள்
வரவேற்றனர்! அவன்புகுந்தான் அதிர்ந்ததுவே பாரெங்கும்!
ஆறாவது பாசுரத்தே கோதைதனை எம்பெருமான்
இணைவுதனைக் கொண்டாரே! கனவின்பம் சேர்மகிழ்வே!

வாரணமாயிரம் 10




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

## பாவகை: கொச்சகக் கலிப்பா

யாவருமே போய்வருவோம் யாழிசையின் பயணத்தில்
பாவலராய். அனைவருமே பரப்பளவின் திசையெங்கும்
காவலனாய் காத்திடுமே காடுமேடும் உறைவிடமாய்
ஆவலுடனே பயணிப்போம் அகிலத்தை சுற்றிடவே

கலைநயமும் களிப்புறுதே கங்கைகொண்ட சோழபுரம்
சிலைவடிவம் அழகுபெறும் சீர்புகழின் பெரியவோவில்
மலையழகாம் நீலகிரி மயக்கத்துடன் காண்போமே
அலைகடலாய் திரள்வோமே அதிசயங்கள் கண்டிடவே



அழகர்மலை சுணைநீரில் அனுதினமும் குளித்திடனும்
பழனிமலை நடைபயின்று பண்டிதனை வணங்கிடனும்
குழவிகளின் ஆசையோடு குளிர்நடுவில் வாழ்ந்திடனும்
நிழலற்ற பெருவழியாய் நிலவினையும் சுற்றனுமே

குற்றால அருவிதனில் குளிர்வூட்டமாய் நீராடனும்
கற்கோவில் பலவற்றை கண்ணெதிரே பார்த்திடனும்
சிற்பத்தின் அருகாமையில் சிறுபொழுதைக் கழித்திடனும்
நெற்கதிரின் வயல்வெளியில் நிமிர்ந்தநடை பயிலனுமே

ஊரெல்லாம் கண்டிடவே உண்மைநடை செல்லனுமே
தேரெல்லாம் ஏறிநின்று தேன்தமிழை இயற்றிடனும்
வேரெடுத்து நடனும்தான் வியர்வையோடு விளைந்ததையும்
பாரெல்லாம் உலாவந்து பயிற்றுவிப்போம் தலைமுறைக்கே!

கவிஞர் ஈ. தவணிதன், பல்லடம்

# வாழ்ந்திடு


படபடவென பறந்தோடும் மனிதா
பறந்தோடி பரிசா பெறபோகிறாய்
பக்கத்திலுள்ளோர் பாராமலே
பந்தயக்குதிரையாக ஓடுவது ஏனோ?
பகட்டுவாழ்வை நோக்கி ஓடும் நீயும்
பதறிய ஓட்டமும் எதற்காகவோ?
பணமே பலமென்று நீயுமே
பதவிக்கும் துரோகம் செய்கிறாயே
படிபடியாக முன்னேறாமலே
படாரென ஏறிட நினைப்பது ஏனோ?
பள்ளமேடு பாராமலே
பந்தய வாழ்வை ஏன் நடத்துகிறாய்
பண்பாட்டையும் மறந்திட்டே
படாதபாடு படுத்துகிறாயே
பழியுணர்ச்சியால் பாழாகிறாயே
பழம்பெருமை மறந்திட்டாயே
பழங்கதையானாயே
பளிங்குபோல பளபளப்பானதையுமே
பல் பிடித்து பதம் பார்க்கிறாயே
பணிவென்பதையும் மீறி
பராரியாக அலைகிறாயே
படோட வாழ்வுதான் உன் குறியா
பகடியாகிடுமே உன் வாழ்வுமே
பட்டிதொட்டியிலும் வாழ்ந்திடும் மனிதம்
பங்களாவில் இல்லாததும் ஏனோ?
படைத்தவனையும் நினையாமல்
பயமுமில்லாமலே பறந்து ஓடுகிறாயே
பலபரீட்சையில் மாட்டிடுவாயே
பலவீனமும் அடைந்திடுவாயே
பத்துமாதம் சுமந்தவளையும் மறக்கலாமா?
பத்திரமாய் காத்தவரையும் ஒதுக்கலாமா?
பதியாக வந்தவளையும் விலக்கலாமா?
பவித்ரமான வாழ்வு இதுவே
பச்சாதாபத்தோடு வாழ்ந்திடு.



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# விழி நீர்

மகிழ்வையும் துயரத்தையும்
ஒன்றாகவே எண்ணுகிறாயோ
உடனே பெருக்கெடுக்கிறாய்
என் விழி நீரே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

எங்கோ போகிறேன்
எதையோ தொலைப்பதற்கு
திரும்பி வருகையில்
நான் அவனாயிருக்க வாய்ப்பில்லை



கண்களை மூடி
காற்றினில் கரைகிறேன்
எதையும் தேடா பயணத்தில்
நானற்ற நான்

காற்றிலும் கரைவதில்லை
மண்ணிலும் புதைவதில்லை
நானெனும் துளி
நம்பிக்கையின் வழி

விருப்பு வெறுப்பின்றி
சகலத்தையும்  அப்படியே ஏற்கிறேன்
நிபந்தனையற்ற அன்பை
தேடும் பயணத்தில் நான்

சாதாரணோர் பார்க்கிறார்கள்
சாதிப்போர் படைக்கிறார்கள்
புத்திளம் விழிகளுக்கே
புலப்படும் பாதைகள்

கவிஞர் ராஜு ஆரோக்கியசாமி, பிக்சாண்டார் கோவில்

# நீ இன்றி நானில்லை

என்னவனே நீ இன்றி நானில்லை
உன்னை நீங்கி என் வாழ்வில்லை
உறவாக வந்து என் உயிரில் கலந்தாய்
தாயாக என்னை தாங்கிய தங்கமே
என் உணர்வுகளை புரிந்து
உண்மையாக என்னை நேசித்தாயடா
உன் நெற்றியில் முத்தம் கொஞ்சுவேன்
உன் கை கோர்த்து ராணி போல்
நானும் நடைபழகையில் ராஜாவாக நீயும்
ஆசைகள் என்று ஒன்றும் இல்லை
பேராசை மட்டும் உள்ளது
உன்னோடு மகிழ்ச்சியாய் வாழ காதல் செய்வேன்
காலம் வரை நீ இன்றி நானில்லை
காதல் என்பதும் பொய் இல்லை
உன்னையும் என்னையும் பார்க்கையில்.



கவிஞர் ப. ஜெகதீஸ்வரி, ஒ. தண்டரை

# அடுத்த சென்மத்திலாவது

காலப்பெருவெளியில் சில ஐந்தாண்டுகள் கறைந்து சென்ற பின்
மீண்டும் கண்டு கொள்ள வருகிறேன்
உந்தன் காதல் திருமுகம்!
அவ்வண்ணமே மிளிருமா மகிழ்ச்சியில் திளைத்த பூ முகம்!
ஒன்றோ இரண்டோ இருக்குமா
பழகி வந்த ஆண்டுகளும் பகிர்ந்து கொண்ட வார்த்தைகளும்.



இன்றேனும் பேசு பெண்ணே!
"வாங்க " ஆண்டுகள் தோண்டிய அதே குரல் !
ஆனால், நீ மட்டும் நீ இல்லை நான் மட்டும் நானில்லை!
பட்டாம்பூச்சியாய் சிறகடித்து பறந்து செல்லும் அவள் எங்கே?
எல்லாம் பறிபோனதாக தன் விதியை நினைத்து நோகும்
இவள் எங்கே?அவள் மட்டும் அவளில்லை!

இந்த உலகின் மகாராணியாய் பவனி வரும் அவள் எங்கே?
இந்த உலகமே இருண்டதாக நினைத்து
நடைபிணமாய் நடக்கும் இவள் எங்கே?
கையில் இருந்த பொன் மகளை இரண்டெழுத்து வார்த்தைகளாலும்,
பொருளாதாரத்தாலும் இன்னொருத்தன்
களவாட விட்ட கையாலதவன்தான் நான்!

நானோ நீயோ வெவ்வேறு சாதியில் பிறந்தது
என் தப்பா? இல்லை உன் தப்பா?
பொருளாதாரத்தில் நான் தாழ்ந்து பிறந்ததுதான் என் தப்பா?
பொருளாதாரத்தில் உயர்ந்து பிறந்தது தான் உன் தப்பா?
இல்லை மனதுக்கு பிடித்தவர்களை சேர விடமால்
பார்த்து கொள்ளும் இந்த சமூகத்தின் தப்பா?
இல்லை இதையெல்லாம் வேடிக்கை பார்க்கும் ஆண்டவன் தப்பா?

தப்பேதும் செய்யாமல் மனதால் நொறுங்கி செத்தோமே
நாம் என்ன தவறு செய்தோம்!
காதலித்தோம்! ஒருவரையொருவர் விரும்பினோம்!
சேர்ந்து வாழ ஆசை பட்டோம்!
இதிலென்ன தப்பு இருக்கிறது நம்மீது?

இனிமேலும் இங்கிருப்பின் கண்ணீரோடு
உண்மைகளும் கொட்டி விடும் என்றஞ்சி கும்பிட்டு வெளியேறினேன்.
போய் வருகிறேன் எனது ஆருயிரே கலங்காதிரு!
காலங்கள் பல கடந்தும் வாழட்டும் நம் காதல்!
அடுத்த சென்மத்திலாவது நாம் இணைந்து வாழ்வோம்!

கவிஞர் தினேஷ் கண்ணா, வழுதாவூர்

# விபத்துகளைத் தவிர்ப்போமே!

உலகளவில் சாலைவிபத்துகளில்
இந்தியா மூன்றாமிடத்தில்!
சாலை விபத்தால் உயிரிழப்பில்
இந்தியா முதலிடத்தில்!
காரணங்களை ஆராய்ந்தால்
சாராம்சம் இவ்வாறாய்!




விதிகளை மதியாமை!
அதிவேகப் பயணம்!
சீரற்ற சாலைகள்!
சரிகின்ற வாகனங்கள்!
தலைக்கவசம் அணியாமை!
விலைமதிப்பில்லா உயிரிழப்பு!

மதுவின் மயக்கத்திலும்
பாதிப்பை உணராமல்
அதிவிரைவாய் இயக்கம்!
வேகத்தடை குறித்த
அறிவிப்பின்மை!
குறுகிய சாலைகள்!
கவனக்குறைவு!

உரிமமின்றி வாகனத்தில்
விரைகின்ற சிறுவர்கள்!
அனுமதிக்கும் பெற்றோர்கள்!
அதனால் பல விபத்துகள்!

பராமரிப்பில்லாத சாலைகள்!
பராமரிப்பில்லா வாகனங்கள்!
கைப்பேசியில் பேசியபடி
இயக்குகிறார் வாகனத்தை!
கவனச்சிதறலால் விபத்துகள்!

தவறிழைப்போர் மட்டுமின்றி
தவறுசெய்யா வாகனஓட்டிக்கும்
தண்டனையாய் விபத்துகள்!
உறுப்புகளை இழப்பதும்
உயிரிழப்புகளும் தொடர்கதையாய்!

சாலை விதிகளை மதிக்கின்ற
நிலைவந்தால் மாறும் இந்நிலை!
தனிமனிதன் மனநிலை
இனியேனும் மாறிடுமா?

சட்டங்களில் திருத்தங்கள்,
கடுமையான தண்டனைகள்,
விதிகளை மீறுவோர்க்கு
விதித்தால்தான் மாற்றம்வரும்!

மதித்திடுவோம் சாலைவிதிகளை!
தவிர்த்திடுவோம் விபத்துகளை!
விபத்தில்லா பயணத்தால்
நாமெல்லாம் மகிழ்வோமே!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# உடம்பினை மறந்து

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்ததேன்
உடம்பினுள் குள்ளே உறுபொருள் கண்டேன்
திருமூலர்

உள்ளம் மறந்து உடம்பினை உழைத்து வெகுதூரம்
ஓய்வின்றி ஒப்பனைக் கொல்லும்
துச்சம் குருதி
எஞ்சிய உழைப்பும் மிஞ்சி போகுமே அன்று
உடல் பொருள் கானல் நீராய் கருகிய கணம்
ஒவ்வொரு பிறவியும் மறுகணம் மரணம்



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

## நூல் அனுபவம்

மீன்கொடி கி.பாண்டியராஜ் ; பக்கம் 96; விலை ரூ 120;
முதல் பதிப்பு 2024 ; வெளியீடு: தாய்த்தமிழ் பட்டிமன்றக் குழு திருப்பூர்




இயற்கையின் விளையாட்டில் வனம் நுழைந்த பட்டாம்பூச்சியென, வானம் அளந்த ஒளிப்பறவையென,குழந்தை கை பொம்மையென, புத்தனின் வரம் வேண்டிய ஆசையென, கூண்டைத் துறந்த சிறகின் விடுதலையென, கானகத்தின் இசையில் மிதக்கும் இறகென,ஏந்திக் கொண்ட மலர்களின் இதழ்த் தேன் ருசிக்கும் சிற்றுயிரென, இயற்கையின் சகல வித்தைகளையும் வியக்கவைக்கும் விந்தைகளையும் ஏழ்மையின் கதையை மனதோடு ஒட்டவைத்தே உணரத் துடிக்கும் இதயத்தின் ஈரத்தையும் மனவயலுக்குள் விதைத்துச் சென்றிருக்கும் அடர்வனத்தில் முதல் விதை ஆயுளை நீட்டிக்கிறது அகிலத்தின் உயிர்களுக்கும் அன்பிற்கும் போதுமான அளவு. கவிஞரின் முதல் நூல் முற்றிலும் செழுமையான நூல்.அடர்ந்த கருத்துகளின் உறைவிடமான நூல்.

இயற்கையின் மீதான பொது நலத்தையும் நேசத்தையும் ரசித்துப் பார்க்கும் ஒவ்வொரு மனதிலும் எப்போதும் ஊறிக் கொண்டேயிருக்கும் கருணையும் காதலும்.தன்னைச் சுற்றி உலவும் எல்லா நிகழ்வுகளையும் உற்றுநோக்கும் மனம் தனக்குள் அனைத்தையும் பதிவு செய்துகொள்ளும்.ரசனையும் அன்பும் தழும்பி நிற்கும் மனதினில் காணும் அனைத்திலும் சிறப்பானவற்றையே கண்ணுறுகிறது. அதையே தனக்கான மனநிலையாகவும் வழியமைப்பாகவும் மாற்றிக் கொள்கிறது.

மூன்று வரிகளில் முத்து முத்தான சிந்தனைகள், இயற்கையின் அளப்பறிய ரசனைகள், மனிதாபிமானம், சூழல் சீர்கேட்டின் மீதான கரிசனம், குழந்தைமைத்தனம்,கல்வியின் மீதான தீவிரத்தன்மை, தாய்மையைக் கொண்டாடும் பாசம், புத்தனாய் மாறத் துடிக்கும் அமைதியின் மனம், சமூகச் சீர்கேடுகளைக் கண்டு குமுறும் நெஞ்சம் என சகல தளங்களிலும் பயணிக்கிறது

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

## நூல் அனுபவம்

ஹைக்கூ வகைமையில் உவமை உருவகம் என்ற அமைப்புகளிலோ வர்ணனைகளிலோ கவிதைகள் உருவாக்குதலைத் தவிர்க்கவேண்டும் என்பார்கள். இயற்கையின் வனப்பை காணக் கணக்கிட இயலாத பசுமையின் எழிலை வருடிடும் காற்றின் வருகையை நித்தம் உதிக்கும் கதிரோனின் வெம்மையை கற்பனையைத் தூண்டி கவிஞர்களை கிறுக்கவைக்கும் நிலாவை தான் காணும் கோணங்களுக்குள் அடக்கி நேரடித்தன்மையை ரசிக்க வைக்கும் பாண்டியராஜின் கவிதைகளுக்குள் நிறைந்திருக்கின்றன உண்மையும் வாழ்வின் மீதான எதிர்பார்ப்புகள் அடங்கிய தன்மையும்.

தேநீர் கோப்பையை
ஆட்டிவிட்டு ஊதுகிறேன்
நிலா ஓரம் போகிறது

மரம் நிறைந்த சாலை
கடந்து போகும் காற்றுக்கு
குரல் உண்டு.

ஆணி அடித்து
சுவரில் மாட்டியிருக்கிறேன்
இயேசு படம்

கருணையையும் மன்னிப்பையும் நமக்கான பாதைகளாகக் காட்டியவருக்கும் ஆணி அடிக்கத்தான் தேவையிருக்கிறது.

ஊசி குத்தி
உடைந்து விட்டது
நுரையில் சிக்கிய வானம்

எல்லோருக்குள்ளும் ஒளிந்து கிடக்கும் குழந்தைத்தனமே அவரவர் நகர்வை சுவாரஸ்யமாக்குகிறது.ரசனை மனமே மேலும் மேலும் புதியனவற்றைத் தேட உற்சாகமடைகிறது.

தேங்கிய நீரில்
தன்னைத்தானே நசுக்கியபடி
வாகனங்கள்

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

## நூல் அனுபவம்

சுவரில் வடியும்
ஒரு துளி பனி
இழுத்துச் செல்கிறது நத்தையிடம்

கற்களை குவித்து
கடவுள் என்கிறார்கள்
விளையாடும் சிறுவர்கள்

நதியின் வேகத்தில்
நீந்திச் செல்கிறது
வலைக்குத் தப்பியமீன்

கூப்பன் சேலையில் தாய்
முதுகில்
மகனும் புத்தகப்பையும்

தனக்கான வறுமையின் கொடுங்கரங்கள் தன்னோடு மடியட்டுமென்ற தாயின் லட்சியமே வாரிசை கல்வியின் திசை நோக்கி நகர்த்துகிறது.

முறிந்த கிளையில்
வந்து அமரும் குருவி
அலகில் ஒரு குச்சி

உச்சி மலையில் இருந்து
பறந்து வரும்போது
இறகின் சாயல் இலைகளுக்கு.

கட்டற்று பறக்கும் மனம் வாய்க்கப் பெற்றால் சுமைகளைத் துறந்தே சொர்க்கத்தை எட்டிவிடும் எல்லா மனங்களும்.

அடர்ந்த காட்டைக்
கடந்த பின்னும்
மணக்கிறது காற்று

பருவ தலை மாற்றங்களும் மக்களின் பயன்பாட்டின் இயலாமையும் இன்று கிணறுகளை மூடிக் கொண்டிருக்கின்றன.

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

## நூல் அனுபவம்

பசியால் இறந்தவன்
கைரேகையில்
மூன்று வாரிசு

கால் உடைந்த சிற்பி
கவனம் செலுத்திச் செய்கிறான்
கடவுளின் கால்கள்

செல்வந்தனும்
தலையில் துண்டு போட்டபடி
ஒரு மழை நாளில்

புல்லாங்குழலை விடுங்கள்
வந்து ரசியுங்கள்
காற்றின் இசையை.

இலை உதிர்ந்த மரம்
இருந்தும் வளர்கிறது
பகலில் நிழல்

எரியும் மெழுகுவர்த்தி
வெளிச்சத்தைச் சிறைபிடித்தபடி
சுற்றிலும் இருள்

தான் படைத்த கடவுளை தான் பார்த்து ரச்க்கவும் கட்டணமிடும் மனிதர்கள் பக்தியை ஆன்மிகத்தை வியாபாரமாக்கும் நிலையை எப்போது மாற்றப்போகிறார்கள்? பயம் தன்னை நம்பாத நிலை என பல காரணங்களால் கடவுளிடம் தன்னை ஒப்படைக்கும் மனிதன் ஆலயத்தின் பேராலும் ஆண்டவனின் பேராலும் பணத்தை வசூலிக்கும்போது இறைத்தன்மை வினாவுக்குள் நிற்கிறதே!

மிக மிக அருகில்
நானும் கடவுளும்
கட்டணம் ஆயிரத்து ஒன்று

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# அடர்வனத்தில் முதல் விதை

## நூல் அனுபவம்

புத்தனும் பட்டாம்பூச்சியும் இயற்கையும் நிலவும் ஹைக்கூ கவிஞர்களுக்கு எப்போதும் கைகொடுக்கும் பாடுபொருட்கள். அவற்றைத் தாண்டி நம்மைத் திரும்பிப்பார்க்க வைக்கும் உலகின் பாடு பொருட்களில் நிறைந்திருக்கிறது இத்தொகுப்பு. நம் மனவெளியின் கருணை வனத்தில் அன்பையும் இரக்கத்தையும் இயற்கை மீதான நேசத்தையும் விதையெனத் தூவிச்செல்லும் கவிஞரின் எண்ணத்தை வாசிக்கும் நாமும் ஈடேற்றப் பார்ப்போம்.




திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# பறி போனதா நெஞ்சம்..!?

## நூல் அனுபவம்


(புதுக்கவிதைகளின் பூங்கொத்து)

கவிமாமணி "இரஜகை நிலவன்"ஒரு நல்ல கவிஞர் என்று அறிவேன். இன்பம் பயந்து இனிமை சொரிந்து துன்பம் விலக்கி தூய்மை வளர்த்து அன்பைப் பெருக்கி அளவிற்பெருகி இன்பமாய் எழுந்துள்ள, இந்த"பறி போனதா நெஞ்சம்" (புதுக்கவிதைகளின் பூங்கொத்து) ''புத்தகம் ஒரு சிறந்த படைப்பு. வணக்கம்.

தமிழ்மகள்வாசுகி
பத்திரிகையாளர்
பெங்களூர்*560005.
Ph.97 402 102 87 Ph.879 22 77 453


சிறப்பு தேடலின் ஆதாரம் ஆசைகளின் அடிவாரம், சிறப்பு




திரு குமார் சி. எம்

## நூல் அனுபவம்




தி.மு.க பவளவிழா காணும் இந்த நேரத்தில் திமுகழகத்தை உருவாக்கியவர், பெரியாரின் வழித்தோன்றலாய் இயங்கி கொண்டிருந்தவர் தனிக்கொடி,தனிநாடு, தமிழே இந்தியாவின் ஆட்சி மொழி என்று பாராளுமன்றத்தில் முழங்கியவர், மெட்ராஸ் மாகாணத்தை தமிழ் நாடு என்று பெயர் சூட்டியவர். பெரியார் கொள்கைகளுக்கு தி.மு.கழகம் ஆட்சியில் அமர்ந்தவுடன் செயல்வடிவம் கொடுத்தவர். மிக எளிய வாழ்க்கையை வாழ்ந்தவர் அண்ணா, பெரியாரின் தம்பியாக செயல்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா பெரியாரை விட்டும் தி.கவையும் விட்டு பிரிந்த போது பெரியார் பலவாறு தவறாக பேசியுள்ளார். ஆனால் அண்ணாவோ எங்களின் தலைவர் பெரியார் தான் பெரியவர் பேசினாலும், அடித்தாலும் வாங்கி கொள்வோம். அதனால் தான் கலைஞர் இருந்தவரை தி.முகழகத்தின் அனைத்து பொறுப்புகளும் பொதுச்செயலாளர் தான் கவனித்து கொள்வார்.
தலைவர் பதவி எப்போதும் பெரியாருக்கு என்பதில் அவருக்கு ஒரு போதும் சந்தேகமே இருந்ததில்லை. இப்போது இருக்கும் தற்போதைய தமிழ்நாட்டின் முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கும் அந்த பொறுப்பு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வர் மூதறிஞர் ராஜாஜி குலக்கல்வி என்றவுடனே கண்டண அறிக்கையை வெளியிட்டார்கள் பெரியார்,பேரறிஞர் அண்ணா போன்றோரின் பெரும் கண்டணங்களால் மூதறிஞர் ராஜாஜி பதவி விலகினார். பச்சை தமிழர் காமராஜர் முதல்வரானர்.

திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## நூல் அனுபவம்

இப்படி ஆரியர்கள் உருவாக்கி வைக்கப்பட்டிருக்கும் மாயைகள் பல அவற்றை எல்லாம் மேல்நாட்டு அறிஞர்கள் எழுத்துப்படி இதுவெல்லாம் தப்பா என்று அனல் பொங்க கொதிக்கிறார் பேரறிஞர் அண்ணா. தகுந்த ஆதாரங்களுடன் தகுந்த மேற்கோள்களோடு ஆரிய மாயைகளை விமர்சிக்கிறார் பேரறிஞர் அண்ணா.

ஆரியர்களை ஓட ஓட விரட்டுவதற்கான அனைத்து விஷயங்களையும் பெரியார் வழி வந்தவர்கள் பேரறிஞர் அண்ணா தொடங்கி தற்போதைய தமிழக முதல்வர் ஸ்டாலின் வரை செய்து கொண்டே இருக்கிறார்கள் அதில் முக்கியமானது தான் "அனைத்து சமுதாயத்தினரும் அர்ச்சகர் ஆகலாம்" எனும் திட்டம் இந்த திட்டத்தை எதிர்த்து உடனே உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள் ஆரியர்கள். அந்த வழக்கு அது ஒரு பக்கம் நடக்கட்டும் இந்த திட்டம் ஒரு பக்கம் நடக்கட்டும். 55 பேர் கோவில் அர்ச்சகர்களாக தமிழ் நாடு அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.
இது பெரியார் கண்ட பெருங்கனவு. எல்லோர் மீதும் எனக்கு விமர்சனங்கள் உண்டு அதுக்காக நல்ல விஷயங்களை நான் சொல்லாமல் இருக்க முடியாது.இப்படி ஆரியத்தின் அனைத்து மாயைகளையும் வேரறுப்பதாகவே இந்த நூல் வெளிவந்துள்ளது.

ஆரியமாயை புத்தகம் எழுதியதற்காக என்னைச் சிறையில் போட்டுவிட்டார்கள் சரி! அதைப்படித்த எண்ணற்ற வாலிபர்களை என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் இதயத்திலே குடிகொண்டிருக்குமே "ஆரிய_மாயை" கருத்துக்கள் அதற்கு என்ன செய்யப் போகிறார்கள்? ஒவ்வொரு வாலிபராகக் கூப்பிட்டு "உன் உள்ளத்திலே "ஆரிய_மாயை" கருத்து இருந்தால் அதை கக்கு "நீ வா உன்னுடைய எண்ணங்களிலே ஆரிய மாயைக் கருத்துக்கள் கலந்திருந்தால் அவைகளை எடுத்து வீசிவிடு என்று சொல்லப்போகிறார்களா? சிறையில் தள்ளிவிட்டார்கள். புத்தகம் எழுதிய

திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## நூல் அனுபவம்

குற்றத்திற்காக அந்தப் புத்தகத்திலே உள்ள கருத்துக்களை மனப்பாடம் செய்துவிட்ட எண்ணற்ற வாலிபர்களை என்ன செய்யப்போகிறார்கள்?

இந்த நூல் குறித்த தனது பார்வையை புதுவை சிவம் அவர்களின் மகன் புதுவை சிவ.இளங்கோ சமீபத்தில் முகநூலில் பதிவு செய்கிறார் அதனையும் தங்களின் பார்வைக்கு சமர்பித்து விடுகிறேன்.

"பேராசைப் பெருந்தகையே போற்றி!
பேச நா இரண்டுடையாய் போற்றி!
தந்திர மூர்த்தி போற்றி!
தாசர்தம் தலைவா போற்றி!
வஞ்சக வேந்தே போற்றி!
வன்கண நாதா போற்றி!
கொடுமைக் குணாளா போற்றி!
கோழையே போற்றி போற்றி!
பயங்கொள்ளிப் பரமா போற்றி!
படுமோசம் புரிவோய் போற்றி!
சிண்டுமுடிந் திடுவோய் போற்றி!
சிரித்திடு நரியே போற்றி!
ஒட்டுவித்தை கற்றோய் போற்றி!
உயர் அநீதி உணர்வோய் போற்றி!
எம் இனம் கெடுத்தோய் போற்றி!
ஈடில்லாக் கேடே போற்றி!
இரை இதோ போற்றி! போற்றி!
ஏத்தினேன் போற்றி! போற்றி!"

பேரறிஞர் அண்ணாவின் "ஆரிய மாயை" நூலின் தொடக்கம் தான் இது.

திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## நூல் அனுபவம்

உச்ச கட்ட நையாண்டியுடன் ஆரியர்களின் தந்திரம், நயவஞ்சகம், இரட்டை நாக்கு இவற்றுடன் மன்னர்களை அண்டிப் பதவி பெற்ற பின்னர் அநீதி, மோசம், அயோக்கியத்தனம், கொடுமை செய்தல், கலகமூட்டுதல், சிண்டு முடிதல் ஆகியவற்றை ஆரியர்கள் தொடர்ந்து செய்து வந்தனர் என்றும், இதுவே ஆரியர்களின் இயல்பு என்றும் குறிப்பிட்டுத் தொடர்கிறது இக்கட்டுரை.

அறிஞர் அண்ணாவின் "ஆரிய மாயை" நூல் வகுப்பு வாதத்தைத் தூண்டுவதாகக் கூறித் திருச்சி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் அண்ணாவுக்கு 700 ரூபாய் அபராதமும், செலுத்தத் தவறினால் ஆறு மாதம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்த மறுத்த அண்ணா திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். உலக வரலாற்று ஆய்வாளர்கள் ஆராய்ந்து வெளியிட்ட செய்திகளின் அடிப்படையில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியதற்காகக் குற்றவாளி ஆக்கப்பட்டார் அண்ணா. அண்ணாவுக்கு ஆறு மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

ஆரியம் என்பது பிறமொழி பேசும் பிரமாணர்கள் திராவிடம் என்பது தமிழ் மொழி பேசும் எளிய மக்கள் இதை நான்கு பிரிவுகளாக வகுத்துக் கொண்டு ஆரியர்கள் ஆட்சியின் மிக முக்கிய பொறுப்புகளில் அமர்ந்து கொண்டு அநீதி பண்ணி கொண்டு வருகிறார்கள் என்பதை எவ்வித ஒளிவு மறைவு இல்லாமல் பட்டவர்த்தனமாக போட்டு உடைக்கிறார் பேரறிஞர் அண்ணா.

தமிழ் குடியே மூத்த குடி! தமிழே மொழிகளின் தாய் மொழி! வாழ்க தமிழர்! வாழ்க தமிழ்நாடு!ஓங்குக தமிழர் புகழ்!

திரு தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## நாடகம்

**காட்சி-4 ;**
**இடம்-ரோடு ; பாத்திரங்கள்: எமல்டா, எழிலரசி**

**எழிலரசி :** என்ன எமல்டா இவ்வளவு பரபரப்பாக இருக்கிறீர்கள்? இப்போது ரோட்ரிக்ஸ் எப்படி இருக்கிறார்.

**எமல்டா :** அவருக்கு உடல் நிலை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த மருந்தை சிட்டியிலே போய் வாங்க வேண்டும். ஒரு ஆட்டோகாரனும் வர மாட்டேங்குறான். டாக்டர் ஒரு மணி நேரத்திற்குள் மருந்தை வாங்கி வரச் சொல்லியிருக்கிறார்.

**எழிலரசி :** கவலைப்படாதீர்கள்.நான் வாங்கி வருகிறேன் நீங்கள் போய்] ரோட்ரிக்ஸை பார்த்துக் கொள்ளுங்கள்.

**எமல்டா :** எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது எழிலரசி. அவர் பிழைத்துக் கொள்வாரில்லையா?

**எழிலரசி :** கடவுளை நோக்கி நல்லா ஜெபம் பண்ணுங்கள்.அவரால் ஆகாதது ஒன்றுமில்லை. இறந்தோரை உயிர்ப்பித்த அவர், இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்த நம் அன்பு தேவன் உங்கள் கணவருக்கு நல்ல சுகம் கொடுப்பார். விடாது ஜெபியுங்கள். கேளுங்கள் கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொன்னவர் இயேசு பிரான். உங்கள் குழந்தைகள் அப்பம் கொடுத்தால் கல்லையா கொடுப்பீர்கள் நீங்களே இவ்வளவு செய்யும் போது உங்களுக்கு பரலோக இராஜ்ஜியத்தில் வீற்றிருக்கும் தேவன் எதை வேண்டுமானாலும் கொடுப்பேன் என்று சொல்லியுள்ளாரே. மனமுருகி கேளுங்கள். கண்டிப்பாக ரோட்ரிக்ஸை தேவன்| குணமாக்குவார்.

**எமல்டா :** உங்களுக்குத் தான் வீண் சிரமம் கொடுக்கிறேன்.

திரு இரஜகை நிலவன்

**எழிலரசி :** வேண்டிய நேரத்தில் உதவி செய்யவில்லை எனில் நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதில் கூட அர்த்தமில்லாமல் போய்| விடும். நீங்கள் போய் மருத்துவமனையில் படுத்திருக்கும் ரோட்ரிக்ஸை கவனியுங்கள். நான் மருந்துடன் வருகிறேன்.

**எமல்டா :** இதோ பணம் எடுத்துக் கொள்ளுங்கள் (பர்ஸை திறக்கிறாள்)

**எழிலரசி :** அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.



தொடரும் ...

திரு இரஜகை நிலவன்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கட்டுரை

அன்னை மொழியே! அழகார்ந்த !
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாசெந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியேட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

-பாவலரேறு



பாவலரேறு பெருஞ்சித்திரனார்(மார்ச் 10, 1933 — சூன் 11, 1995) இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர் ஆகியோரின் கொள்கை கற்றவர்களிடமும், மற்றவர்களிடமும் பரவப் பெருங்காரணமாக விளங்கியவர். தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன்தமிழகத்தில் முதன்முறையாக வந்த காலத்தில் அவரையும் அவரது தோழர்களையும் அரணாகக் காத்து அவர்களை வளர்தெடுத்தவரும் இவர்தான். 20 முறை சிறை சென்றும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் தமிழீழப் போராட்டம் வரை இவரது செயல்பாடுகள் தமிழர்கள் நடுவில் வியந்து போற்றப்படுகின்றன.

"என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்! - வரும்
புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! - இந்த(ப்)
பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!"

என்று எழுதி அதன்வழி வாழ்ந்துகாட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார்.

**திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்**

## கட்டுரை

### கல்வி:

பெருஞ்சித்திரனார் 1950இல்பள்ளிப்படிப்பை நிறைவு செய்த பின்னர், சேலம் நகராட்சிக் கல்லூரியில் பயின்றார். பாவாணர் அங்குப் பணிபுரிந்தபொழுது அவர்தம் மாணவராக தமிழறிவு பெற்றார். இளமையில் பெருஞ்சித்திரனாருக்கு உலக ஊழியனார், காமாட்சி குமாரசாமி முதலானவர்களும் ஆசிரியர்பெருமக்களாக விளங்கினர்.

கல்லூரியில் பெருஞ்சித்திரனார் பயிலும் காலத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் விளங்கினார். எனவே தாம் இயற்றிய மல்லிகை, பூக்காரி என்னும் இரு பாவியங்களையும் எடுத்துக்கொண்டு பாவேந்தரைச் சந்திக்க புதுச்சேரி சென்றார். ஆனால் பாவேந்தர் அந்நூல்களைப் பார்க்க அக்காலத்தில் மறுத்துவிட்டதையும் பின்னர் ஒரு நூலைக் கொய்யாக்கனி எனும் பெயரில் அவரே அவர் தம் அச்சகத்தில் அச்சிட்டுத் தந்ததையும் பெருஞ்சித்திரனார் குறிப்பிடுவதுண்டு.

பெருஞ்சித்திரனார் கல்லூரியில் பயிலும் போது கமலம் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அப் பெண்ணே தாமரை அம்மையாராக இன்று மதிக்கப்படுபவர்.

### தென்மொழி இதழும் எழுத்துப் பணியும்:

பெருஞ்சித்திரனார் பள்ளியில் பயிலும் காலத்தில் தமிழ் ஈடுபாட்டுடன் கற்றவர். "குழந்தை' என்னும் பெயரில் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி மாணவர் பருவத்தில் நடத்தியவர். பின்பு அருணமணி என்னும் புனைபெயரில் "மலர்க்காடு' என்னும் கையெழுத்து ஏட்டினை நடத்தினார். மல்லிகை, பூக்காரி என்னும் பாவியங்களைப் பள்ளிப்பருவத்தில் இயற்றிய பெருமைக்குரியவர்.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கட்டுரை

பெருஞ்சித்திரனார் புதுவையில் அஞ்சல் துறையில் முதன்முதலில் பணியில் இணைந்தார். ஐந்து ஆண்டுகள் புதுவையில் வாழ்க்கை அமைந்தது. 1959 இல் பெருஞ்சித்திரனாருக்குப் பணிமாற்றல் கிடைத்து கடலூருக்கு மாற்றப்பட்டார். இச்சூழலில் பாவாணர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்அகரமுதலித் துறையில் பணியேற்றார். பாவாணர் விருப்பப்படி தென்மொழி என்னும் இதழை 1959இல் பெருஞ்சித்திரனார் தொடங்கி நடத்தினார். அரசுப் பணியில் இருந்ததால் தன் இயற்பெயரான துரை-மாணிக்கம் என்பதை விடுத்து பெருஞ்சித்திரன் என்னும் புனைப்பெயரில் எழுதினார்.

தென்மொழியின் தொடக்க ஏட்டில் சிறப்பாசிரியர் பாவாணர் எனவும் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன் எனவும் பெயர்கள் தாங்கி இதழ் வெளியானது. தென்மொழியின் 16 இதழ்கள் வெளிவந்த சூழலில் பொருள் முட்டுப்பாட்டால் இதழ் இடையில் நின்றது. பின்பு கருத்துச் செறிவுடனும் புதுப்பொலிவுடனும் மீண்டும் வந்து கல்லூரி மாணவர்கள் தமிழாசிரியர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது.

தமிழ்ப்பற்றும் தமிழ் உணர்வும் கொண்டு தம் பாட்டு ஆற்றலால் இதழை நடத்திய பெருஞ்சித்திரனார் அக்காலத்தில் சுடர் விட்டு எழுந்த இந்தி எதிர்ப்புப் போரில் தம் உரையாலும் பாட்டாலும் பெரும் பங்காற்றினார். இந்தி எதிர்ப்புப் போரில் இவர்தம் தென்மொழி இதழிற்குப் பெரும் பங்குண்டு. தம் இயக்கப்பணிகளுக்கு அரசுப்பணி தடையாக இருப்பதாலும் முழுநேரம் மொழிப் பணியாற்றவும் நினைத்து அரசுப்பணியை உதறினார். இவர் எழுதிய பாடல்கள் இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவதாக அரசால் குற்றம் சாற்றப்பெற்றது. இவருக்கு இதனால் சிறைத் தண்டனை கிடைத்தது.வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது ஐயை என்னும் தனித்தமிழ்ப் பாவியத்தின் முதல் தொகுதியை எழுதினார்.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

## கட்டுரை

**தமிழ்த்தேசிய விடுதலைப் போராளி:**

"விடுதலை வேண்டும் முதல் வேலை
எந்த வேலையும் செய்யலாம் நாளை"...

-மேற்படி பாடலில் பெருஞ்சித்திரனார் வேண்டிப் பாடிய விடுதலை என்பது தமிழ்நாடு விடுதலையைக் குறிப்பதாகும்.

1956ஆம் ஆண்டு மொழிவழித் தமிழகம் அமைந்த பிறகும் தனிக் கழகம் கண்ட அண்ணா திராவிடநாடு கோரிக்கையை கைவிடத் தயாரில்லை. இந்நிலையில் 1959ஆம் ஆண்டு தமிழ்மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், தமிழ்நாடு விடுதலை ஆகிய மூன்று கொள்கையை முன் வைத்து தென்மொழி இதழை பெருஞ்சித்திரனார் தொடங்கினார்.

**மறைமலையடிகள் வழியில் பெருஞ்சித்திரனார் :**



தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகள் வழியில் தேவநேயப் பாவாணர் தென்மொழி இதழில் சிறப்பாசிரியராகச் செயல்பட்டார். 1963 ஆம் ஆண்டு பிரிவினை தடைச் சட்டம் வந்த போது அண்ணா பயங்கொண்டு திராவிட நாடு கோரிக்கைக்கு முழுக்கு போட்டார். இவரோ ஆட்சியாளருக்கு அடங்கிட மறுத்தார். தனது தென்மொழி ஏட்டிலே, "இந்திய நாட்டின் ஒற்றுமை உணர்வை விடப் பன்னூறாயிரம் மடங்கு உயர்ந்து வலிந்தாகும் தமிழக விடுதலையுணர்வு. அதைச் சட்டத்தால் அடக்குதல் சீறும் புயலை மீன் வலை கொண்டும் மடக்கும் செயல்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

# கட்டுரை

## பெரியாரும் பெருஞ்சித்திரனாரும்:



ஈ.வெ.ரா.பெரியாரை ஆரிய எதிர்ப்பின் அடையாளமாக போற்றி வந்தவர் பெருஞ்சித்திரனார். 1965ஆம் ஆண்டு மொழிப்போரின் போது பெரியார் மீது கடும் சினம் கொண்டார். காமராசர் அவர்கள் நல்லவர் என்று கூறி, பேராயக்கட்சிக்கு சார்பாக பேசியதோடு, தி.மு.க. இந்தியை எதிர்க்கிறது என்பதற்காக இந்தியைப் படிப்பதில் தவறில்லை என்று பெரியார் பேசியதைக் கண்டித்து "பெரியார் செய்த பெரும்பிழை" என்று தென்மொழியில் எழுதினார்.

## கருணாநிதியும் பெருஞ்சித்திரநாரும்:



1976இல் ஆரியப்பித்து கொண்ட பெண் இந்திரா காந்தியால் மிசா சட்டத்தில் ஓராண்டு தளைப்படுத்தப்பட்டார். 1983ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போர் தீவிரமடைந்த போது அதற்குத் துணை நின்றார். 1991இல் இராசீவ் காந்தியை கொன்ற வீரத்தமிழ்பெண் தணுவை பாராட்டி "ஆகுமோ உலகு அவள் அழிவிலாப் புகழ்க்கே" எனும் பாடலை தென்மொழியில் எழுதினார். மேலும் பல நிகழ்வுகளில் தணுவைப் பாராட்டிப் பேசியதால் 15 நாட்களுக்கு மேல் சிறை ஏகினார். 27.1.1993இல் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதால் ஆரிய செயலலிதா அரசு கொடிய தடா சட்டத்தில் கைது செய்தது. நான்குமாதம் சிறைவாசம் கழித்த பின்னரே வெளியே வந்தார்.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

கட்டுரை

**இறுதி போராட்டம்:**

1994இல் 'திராவிடர்' என்று சொல்வது தவறு என்றும், 'தமிழர்' என்றே குறிப்பிட வேண்டுமென்றும் தனது 'தமிழ் நிலம்' ஏட்டில் அறிக்கை விடுத்தார். தாழ்த்தப்பட்டோரை 'பழந்தமிழர்' என்றே குறிப்பிட வேண்டும். ஆதிதிராவிடர் என்றோ, ஹரிஜன் என்றோ, தலித் என்றோ அழைக்கக் கூடாது என்பதையும் தெளிவாகக் கூறி விளக்கமளித்தார்.

கடும் காய்ச்சல் கண்டு துன்ப நிலையில் இருந்த போதும் 24.4.95இல் நடந்த தமிழே பயிற்றுமொழி, ஆட்சிமொழி என்று கூறி தலைநகர் தமிழ்க்கழகம் நடத்திய பேரணியில் கலந்து கொண்டு குடும்பத்தோடு தளைப்படுத்தப்பட்டார். அதுவே பெருஞ்சித்திரனார் இறுதியாகப் பங்கேற்றப் போராட்டமாகும்.

**மறைவு:**

இவரது படைப்புகள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது

சளித்தொல்லை மிகுந்து, சிறுநீரகம் செயலிழப்புக்குள்ளான நிலையில் 11.6.1995 இல் இத்தமிழ்ப் பேருலகத்தை கண்ணீர் கடலில் மிதக்க விட்டு மறைந்தார்.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

நாளை

# நமதே

வெற்றி என்பது
உன்னை உலகிற்கு
அறிமுகம் செய்வது.
தோல்வி என்பது
உன்னை உனக்கே
அறிமுகம் செய்வது.

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com